M.A
7

# ENTRANCE EXAMINATION FOR ADMISSION, MAY 2011.

## M.A. (TAMIL)

## COURSE CODE : 366

Register Number : 

Signature of the Invigilator
(with date)

---

COURSE CODE : 366

Time : 2 Hours — Max : 400 Marks

*Instructions to Candidates :*

1. Write your Register Number within the box provided on the top of this page and fill in the page 1 of the answer sheet using pen.
2. Do not write your name anywhere in this booklet or answer sheet. Violation of this entails disqualification.
3. Read each question carefully and shade the relevant answer (A) or (B) or (C) or (D) in the relevant box of the ANSWER SHEET using HB pencil.
4. Avoid blind guessing. A wrong answer will fetch you –1 mark and the correct answer will fetch 4 marks.
5. Do not write anything in the question paper. Use the white sheets attached at the end for rough works.
6. Do not open the question paper until the start signal is given.
7. Do not attempt to answer after stop signal is given. Any such attempt will disqualify your candidature.
8. On stop signal, keep the question paper and the answer sheet on your table and wait for the invigilator to collect them.
9. Use of Calculators, Tables, etc. are prohibited.

1. கடியலூர் உருத்திரங்கண்ணனார் எழுதிய நூலின் பெயர்

(A) குறிஞ்சிப் பாட்டு (B) மதுரைக் காஞ்சி (C) பட்டினப்பாலை (D) நற்றிணை

2. முல்லைப்பாட்டின் ஆசிரியர் பெயர்

(A) நப்பூதனார்
(B) நக்கீரர்
(C) இளந்திரையன்
(D) நல்லூர் நத்தத்தனார்

3. எட்டுத்தொகையில் இடம்பெறாத நூலின் பெயர்

(A) மலைபடுகடாம் (B) ஐங்குறுநூறு (C) கலித்தொகை (D) பதிற்றுப்பத்து

4. குறுந்தொகைப் பாடலுக்கான சிற்றெல்லை - பேரெல்லையாக அமைவது

(A) 9–12 அடிகள் (B) 4–8 அடிகள் (C) 3–6 அடிகள் (D) 13–31 அடிகள்

5. தரவு, சுரிதகம் - இவை இடம்பெறும் நூலின் பெயர்

(A) திருமுருகாற்றுப்படை
(B) குறுந்தொகை
(C) கலித்தொகை
(D) பதிற்றுப்பத்து

6. அகநானூற்றுப் பாடல்கள் எத்தனை வகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன?

(A) நான்கு (B) ஏழு (C) ஆறு (D) மூன்று

7. "பெரியோரை வியத்தலுமிலமே" - இவ்வடி இடம்பெற்றுள்ள நூல்

(A) பரிபாடல் (B) ஐங்குறுநூறு (C) அகநானூறு (D) புறநானூறு

8. பூரிக்கோ என்பவரால் தொகுக்கப் பெற்ற நூல்

(A) குறுந்தொகை (B) பரிபாடல் (C) அகநானூறு (D) மலைபடுகடாம்

9. தேய்புரிப் பழங்கயிற்றனார் என்பது

(A) ஊர்வழிப்பெயர்
(B) தொழில் வரிப்பெயர்
(C) பாவடி வழிப்பெயர்
(D) இயற்பெயர்

10. பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தினை இயற்றியவர்

(A) பரணர்
(B) பெருங்குன்றூர்க் கிழார்
(C) அரிசில்கிழார்
(D) காக்கைபாடினியார்

11. வையைப் பாடல்கள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர்

(A) மதுரைக் காஞ்சி
(B) பட்டினப்பாலை
(C) பரிபாடல்
(D) நற்றிணை

12. சேர மன்னர்களை முன்நிறுத்தும் நூல்

(A) பட்டினப்பாலை
(B) மலைபடுகடாம்
(C) பரிபாடல்
(D) பதிற்றுப்பத்து

13. நம்பியாண்டார் நம்பி பாடிய உலா நூல்

(A) திருத்தொண்டர் திருவுலா
(B) சுந்தரர் உலா
(C) ஆளுடைய பிள்ளையார் திருஉலா
(D) எதுவுமில்லை

14. பாட்டியல் நூல்கள் கூறும் தூது அடுத்தற்குரிய பொருள்களின் எண்ணிக்கை

(A) 15
(B) 18
(C) 10
(D) 21

15. இராச பாரம்பரியம் எனும் உறுப்பு இடம்பெறும் சிற்றிலக்கிய வகை

(A) உலா
(B) பரணி
(C) தூது
(D) கோவை

16. சீர்காழிப் பள்ளு பாடிய புலவர்

(A) அருணாசலக் கவிராயர்
(B) சீர்காழி சிவசிதம்பரம்
(C) பெரிய கவிராயர்
(D) எவருமில்லை

17. கோவை நூல்கள் எத்தனைப் பாடல்கள் கொண்டு பாடப்பெறும்

(A) நூறு
(B) நூற்றைம்பது
(C) முந்நூறு
(D) நானூறு

18. சடகோபர் அந்தாதி நூலின் ஆசிரியர்

(A) சடகோபர்
(B) சேக்கிழார்
(C) புகழேந்தி
(D) கம்பர்

19. கலம்பக உறுப்புகளில் ஒன்று

(A) தவம்
(B) துறவு
(C) தூது
(D) பரணி

20. பெத்லகேம் குறவஞ்சி நூலை எழுதியவர்

(A) வீரமாமுனிவர்
(B) கால்டுவெல்
(C) சு. இன்னாசி
(D) வேதநாயகம் சாஸ்திரியார்

21. அழகிய சொக்கநாதர் எழுதிய பிள்ளைத்தமிழ் நூல்

(A) விநாயகர் பிள்ளைத்தமிழ்
(B) காந்தியம்மை பிள்ளைத்தமிழ்
(C) முருகன் பிள்ளைத்தமிழ்
(D) எதுவுமில்லை

22. ‘கட்டினும் கழங்கினும்’ எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பா நினைவுப்படுத்தும் சிற்றிலக்கிய வகை

(A) குறவஞ்சி (B) பரணி (C) தூது (D) பிள்ளைத்தமிழ்

23. பாசவதைப் பரணியைப் பாடியவர்

(A) வைத்தியநாத தேசிகர் (B) சுவாமிநாத தேசிகர்

(C) ஒட்டக்கூத்தர் (D) எருவமில்லை

24. காப்புப் பருவத்தில் முதற்கடவுளாக இடம்பெறும் தெய்வம்

(A) சிவபெருமான் (B) திருமால்

(C) விநாயகர் (D) கலைமகள்

25. தொல்காப்பியர், தமிழ் இலக்கியத்திற்கான கொள்கையை அமைத்துள்ள அதிகாரம்

(A) சொல்லதிகாரம் (B) எழுத்ததிகாரம்

(C) பொருளதிகாரம் (D) எதுவுமில்லை

26. ‘Critic’ என்ற சொல்லை முதன்முதலாக இலக்கியத்தோடு தொடர்புபடுத்திப் பேசியவர்

(A) ஃபிரான்சிஸ் பேக்கன் (B) ஜான் டிரைடன்

(C) அ.ச. ஞானசம்பந்தன் (D) தொ.மு. சி. ரகுநாதன்

27. தொடக்ககால ஆய்வாளர்கள் பயன்படுத்திய ஆய்வுமுறை

(A) விளக்க முறை (B) பகுப்பு முறை

(C) அழகியல் (D) உளவியல்

28. உரையாசிரியர் மேற்கொண்ட திறனாய்வு முறை

(A) உளவியல் அணுகுமுறை (B) சமுதாயவியல் திறனாய்வுமுறை

(C) வரலாற்றியல் திறனாய்வுமுறை (D) மூலப்பாடத் திறனாய்வுமுறை

29. குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகள் அல்லது கூறுகளை, யாதாயினும் ஓர் அளவுகோல் அல்லது நோக்கம் கொண்டு ஆராய்வது

(A) வரலாற்றியல் திறனாய்வு (B) மூலப்பாடத் திறனாய்வு

(C) பகுப்பு முறைத் திறனாய்வு (D) சமுதாயவியல் திறனாய்வு

30. குறிப்பிட்ட இலக்கியத்தில் காணப்பெறுகின்ற கதை மாந்தர்களின் உணர்வுகளையும் செயல்களையும் விளக்கும் ஆய்வு அணுகுமுறை

(A) அழகியல் அணுகுமுறை (B) உளவியல் அணுகுமுறை

(C) சமுதாயவியல் அணுகுமுறை (D) வரலாற்றியல் அணுகுமுறை

31. இலக்கிய வரலாறு எழுதுவதில் பயன்படுத்துகின்ற நடைமுறைகள்

(A) நூற்றாண்டுக் கால வரிசை (B) அரச மரபு வரிசை

(C) இலக்கிய வகைமைகளின் வழி (D) மூன்றுமே

32. 'படைப்பு எழுத்தாளர்களும் பகல் நேரக் கனவு காணுதலும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதியவர்

(A) டி.எஸ்.எலியட் (B) கார்ல் குஸ்தவ் யுங்

(C) நார்த்ராப் பிரை (D) சிக்மண்ட் ஃபிராய்ட்

33. அமைப்பியல் அணுகுமுறையை முதன்முதலில் நாட்டார் வழக்காற்றியலுடன் பயன்படுத்தியவர்கள்

(A) ரோலந் பார்த் (B) ஆலன் டண்டஸ்

(C) விளாதிமிர் பிராப் (D) ஜாக் டெர்ரிடா

34. இலக்கியத்தில் பின்னை நவீனத்துவம் முன்வைப்பது

(A) அமைப்பு (B) மையமற்ற அமைப்பு

(C) விளிம்பு (D) மையக்கருத்து

35. மனித சமுதாயத்தின் மரபு வழிப்பட்ட கோட்பாடுகளை - நீதிநெறிகளை - மையமாகக் கொண்டு, அவற்றின் அடிப்படையில் இலக்கியங்களை அணுகும் திறனாய்வு

(A) அறவியல் திறனாய்வு (B) உளவியல் திறனாய்வு

(C) மார்க்சியத் திறனாய்வு (D) தொல்படிமவியல் திறனாய்வு

36. தொல்படிமவியல் அணுகுமுறை என்பது

(A) படிமங்களைப் பற்றி ஆராய்வது (B) குறியீடுகளைப் பற்றி ஆராய்வது

(C) மனிதனின் உளத்தைப் பற்றி ஆராய்வது (D) தொன்மங்களைப் பற்றி ஆராய்வது

37. கோயில்கள் மலிந்த நகரம் எது?

(A) மதுரை (B) திருவண்ணாமலை (C) காஞ்சிபுரம் (D) தஞ்சாவூர்

38. நடராசர் திருநடம் புரிந்தருளும் இடம்

(A) சிற்றம்பலம் (B) பொன்னம்பலம் (C) பேரம்பலம் (D) தாமிரசபை

39. அகத்தியர் வழிபட்டு இலக்கண உபதேசம் பெற்ற தலம் எது?

(A) திருக்கடவூர் (B) இன்னம்பர்

(C) சிதம்பரம் (D) திருவண்ணாமலை

40. திருஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தர் அருளிய தலம் எது?

(A) திருமறைக்காடு (B) சீர்காழி

(C) திருப்புகலூர் (D) பட்டீச்சரம்

41. அபிராமி அந்தாதி பாடிய தலம் எது?

(A) திருக்கடவூர் (B) கும்பகோணம்

(C) திருநள்ளாறு (D) திருவிடை மருதூர்

42. திருநாவுக்கரசரின் இயற்பெயர் என்ன?

(A) மருள்நீக்கியார் (B) சீராளன்

(C) ஆலாலசுந்தரர் (D) உருத்திரசன்மர்

43. இராமரிடமிருந்த வில்லின் பெயர் என்ன?

(A) சாரங்கம் (B) கோதண்டம் (C) பாசுபதம் (D) வச்சிரதண்டம்

44. மகாலட்சுமியின் அம்சமாகக் கருதப்படும் மரம் எது?

(A) மருதமரம் (B) வேப்பமரம் (C) நெல்லிமரம் (D) கடம்பமரம்

45. மஹாவிஷ்ணுவின் ஒன்பதாவது அவதாரம் எது?

(A) மச்சாவதாரம் (B) கிருஷ்ணாவதாரம் (C) வாமன அவதாரம் (D) இராமாவதாரம்

46. திருவாய்மொழி நூற்றந்தாதியை எழுதியவர் யார்?

(A) மணவாளமாமுனிகள் (B) நம்மாழ்வார்

(C) குலசேகரர் (D) நாதமுனிகள்

47. பகவத் கீதை எந்த இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது?

(A) வில்லி பாரதம் (B) இராமாயணம்

(C) மகாபாரதம் (D) வியாச பாரதம்

48. மகாபாரதப் போர் நடந்த இடம் யாது?

(A) துவார்கை (B) குருக்ஷேத்திரம் (C) தெள்ளாறு (D) அயோத்தி

49. புதுச்சேரி கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்
(A) வெண்ணிலா (B) தமிழ் ஒளி (C) சுரதா (D) எவருமிலர்

50. நவீன இலக்கிய வகைகளுள் ஒன்று
(A) காப்பியம் (B) புராணம் (C) சிறுகதை (D) எதுவுமன்று

51. பாரதிதாசனின் இயற்பெயர்
(A) சுப்புரத்தினம் (B) சபாரத்தினம் (C) வேங்கடரத்தினம் (D) எதுவுமன்று

52. புதுச்சேரிப் பெண் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்
(A) மாலதி மைத்ரி (B) சல்மா (C) குட்டி ரேவதி (D) எவருமிலர்

53. பாரதி புதுவைக்கு வந்து சேர்ந்த ஆண்டு
(A) 1906 (B) 1910 (C) 1908 (D) எதுவுமன்று

54. புதுச்சேரி எழுத்தாளர்களில் சாகித்திய அகாடமி விருது பெற்றவர்
(A) கி.இராஜநாராயணன் (B) பிரேம்-ரமேஷ்
(C) லெனின் தங்கப்பா (D) எவருமிலர்

55. புதுவையிலிருந்து வெளிவந்த இதழ்
(A) கணையாழி (B) நிறப்பிரிகை (C) தீராநதி (D) எதுவுமன்று

56. தமிழில் முதலில் எழுந்த நவீன இலககிய வகை
(A) நாவல் (B) சிறுகதை (C) புதுக்கவிதை (D) எதுவுமன்று

57. புதுமைப்பித்தனின் புகழ்பெற்ற சிறுகதை
(A) பிரபஞ்ச கானம் (B) சாபவிமோசனம்
(C) அக்கினிப்பிரவேசம் (D) எதுவுமன்று

58. நவீன இலக்கியம் முதலில் வெளிப்பட்ட இந்திய மொழி
(A) வங்காளம் (B) தமிழ் (C) மலையாளம் (D) எதுவுமன்று

59. வ.வே.சு. ஐயர் எந்த வகை இலக்கியத்தை அறிமுகப்படுத்தினார்.
(A) நாவல் (B) சிறுகதை (C) புதுக்கவிதை (D) எதுவுமன்று

60. கல்கியின் வரலாற்று நாவல்
(A) விஷ்ணுபுரம் (B) பார்த்திபன் கனவு (C) கன்னி மாடம் (D) எதுவுமன்று

61. ஜெயகாந்தனின் நாவல்களில் ஒன்று
(A) கள்வனின் காதலி (B) அம்மா வந்தாள்
(C) பாரிசுக்குப் போ (D) எதுவுமன்று

62. குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப்படுவது

(A) தமிழ்நெறி விளக்கம்
(B) தொன்னூல்
(C) இலக்கண விளக்கம்
(D) எதுவுமில்லை

63. வேற்றுமை என்பது

(A) வினைச் சொல்லிற்கு இறுதியில் வருவது
(B) உரிச் சொல்லிற்கு இறுதியில் வருவது
(C) இடைச் சொல்லிற்கு இறுதியில் வருவது
(D) எதுவுமில்லை

64. நன்னூலார் கூறிய இலக்கணம்

(A) எழுத்துக்கு மட்டும்
(B) சொல்லிற்கு மட்டும்
(C) எழுத்துக்கும் சொல்லிற்கும்
(D) எதுவுமில்லை

65. 'யாப்பருங்கலக்காரிகை'யில் கூறப்பட்டுள்ள அசைகள்

(A) நேர், நிரை
(B) நேர்பு, நிரைபு
(C) நிரைபு நேர்பு
(D) எதுவுமில்லை

66. 'ஆநின்று' என்பது

(A) நிகழ்கால இடைநிலை
(B) இறந்தகால இடைநிலை
(C) எதிர்கால இடைநிலை
(D) எதுவுமில்லை

67. 'முன்றில்' என்பது

(A) போலி
(B) உம்மைத் தொகை
(C) உவமைத் தொகை
(D) எதுவுமில்லை

68. 'தண்டியலங்காரம்' என்பது

(A) ஒரு மொழிப்பெயர்ப்பு நூல்
(B) ஒரு முதல் நூல்
(C) ஒரு பிராகிருத நூல்
(D) எதுவுமில்லை

69. 'தீவகம்' என்பது

(A) ஒரு அணி
(B) ஒரு நூல்
(C) ஒரு செய்யுள் உறுப்பு
(D) எதுவுமில்லை

70. ‘அன்மொழி’ என்பது

(A) ஐந்து தொகையிலும் வரும்
(B) ஒரு தொகையில் மட்டும் வரும்
(C) உம்மைத் தொகையில் மட்டும் வரும்
(D) எதுவுமில்லை

71. சிறுபொழுது என்பது

(A) ஒரு நாளை ஆறாகப் பகுப்பது
(B) ஒரு வார்த்தை ஆறாகப் பகுப்பது
(C) ஒரு நாழிகையை ஆறாகப் பகுப்பது
(D) எதுவுமில்லை

72. ‘வெட்சி’ என்பது

(A) நிரை கவர்தல்
(B) நிரை மீட்டல்
(C) மதில் சூழ்தல்
(D) எதுவுமில்லை

73. புறப்பொருள் வெண்பாமாலை கூறும் திணைகளின் எண்ணிக்கை

(A) 12
(B) 14
(C) 7
(D) எதுவுமில்லை

74. சீர்வகையடியைப் பேசும் நூல்

(A) சிறுகாக்கைப் பாடினியம்
(B) தொல்காப்பியம்
(C) யாப்பருங்கலக்காரிகை
(D) எதுவுமில்லை

75. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய காப்பியம்

(A) வளையாபதி
(B) சீவகசிந்தாமணி
(C) பெரியபுராணம்
(D) சிலப்பதிகாரம்

76. அகவற்பாவால் பாடப்பெற்ற காப்பியம்

(A) மணிமேகலை
(B) கம்பராமாயணம்
(C) சீவகசிந்தாமணி
(D) பெரியபுராணம்

77. சீவகசிந்தாமணியில் பாடப்பெற்றுள்ள கலம்பகங்களின் மொத்த எண்ணிக்கை

(A) 10 (B) 13 (C) 8 (D) 3

78. வளையாபதி காப்பியம் எந்த சமயத்தைச் சார்ந்தது?

(A) வைதீகம் (B) பௌத்தம் (C) சமணம் (D) வைணவம்

79. குண்டலகேசியின் ஆசிரியர்

(A) நாதக்குத்தனார்
(B) வெண்ணாவலுடையார்
(C) தோலா மொழித் தேவர்
(D) எவருமில்லை

80. ஐம்பெருங்காப்பியங்களில் சமண சமயத்தைச் சார்ந்த காப்பியங்கள் எத்தனை?

(A) மூன்று
(B) இரண்டு
(C) நான்கு
(D) எதுவுமில்லை

81. 'திருத்தொண்டத் தொகை' எந்தக் காப்பியம் எழுதுவதற்கு உதவியாக இருந்தது?

(A) கந்த புராணம்
(B) திருவிளையாடற் புராணம்
(C) வைசிய புராணம்
(D) பெரிய புராணம்

82. திருவெண்ணெய் நல்லூரில் பிறந்தவர்

(A) சேக்கிழார்
(B) சடையப்பவள்ளல்
(C) கம்பர்
(D) இளங்கோவடிகள்

83. கந்த புராணத்தின் கதை வடமொழியில் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

(A) சிவசங்கர சங்கிதை
(B) மேருமந்திர புராணம்
(C) ஸ்ரீபுராணம்
(D) வைசிக புராணம்

84. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர்

(A) பொ.வே. சோமசுந்தரனார்
(B) ஔவை சு. துரைசாமிப்பிள்ளை
(C) ந.மு. வேங்கடசாமி நாட்டார்
(D) நச்சினார்க்கினியர்

85. திருத்தக்க தேவர் எந்தக் குடியைச் சார்ந்தவர்

(A) சமணக்குடி
(B) சோழர் குடி
(C) சேரர் குடி
(D) சைவக் குடி

86. பெரிய புராணத்தில் உள்ள காண்டங்களின் எண்ணிக்கை

(A) 6
(B) 3
(C) 2
(D) 13

87. "அருண்மொழித் தேவர்" என்றழைக்கப்படும் புலவர் யார்?

(A) திருத்தக்கத் தேவர்
(B) சேக்கிழார்
(C) கம்பர்
(D) எதுவுமில்லை

88. லெபனான் தேசத்தின் சிறந்த கவிஞராக அறியப்படுபவர்

(A) கீட்ஸ் (B) ரசூல் கம்ஸதோவ்

(C) கலீல் ஜிப்ரான் (D) கேபிரியல் ஒகார்

89. 'வெனிஸ் நகரத்து வணிகன்' என்னும் நாடகத்தை எழுதியவர்

(A) பெர்னாட்ஷா (B) இப்ஸன்

(C) ஷேக்ஸ்பியர் (D) ஹெரால்ட் பின்ட்டர்

90. 'தாய்' என்னும் நாவலின் ஆசிரியர்

(A) டால்ஸ்டாய் (B) மக்ஸிம் கார்க்கி

(C) லெனின் (D) தாஸ்தாய்வ்ஸ்கி

91. 'ரொட்டியின் விலை குறைய வேண்டும்; மனிதனின் விலை உயர வேண்டும்' என்று சொன்னவர்

(A) கார்ல் மாக்ஸ் (B) அம்பேத்கர்

(C) ரசூல் கம்ஸ்தோவ் (D) மாயகாவ்ஸ்கி

92. 'புல்லின் இதழ்கள்' என்னும் புதுக்கவிதை நூலின் ஆசிரியர்

(A) இக்பால் (B) மாசேதுங்

(C) வால்ட் விட்மன் (D) ஹோசிமின்

93. பிரஞ்சுப் புரட்சி பெற்றெடுத்த குழந்தை எனப் புகழப்படுபவன்

(A) நெல்சன் மண்டேலா (B) பைரன்

(C) ஷெல்லி (D) கீட்ஸ்

94. நவீன ஆப்பிரிக்கக் கவிதைகளின் முன்னோடி எனப் புகழப்படுபவன்

(A) இக்பால் (B) செங்கோர்

(C) நெல்சன் மண்டேலா (D) ஹோசிமின்

95. ‘முறிந்த சிறகுகள்’ என்னும் நூலின் ஆசிரியர்

(A) பைரன்
(B) கலீல் ஜிப்ரான்
(C) சமீம் அல்காசிம்
(D) ராபர்ட்ஃபிராஸ்ட்

96. ‘மாக்பத்’ என்னும் நாடகத்தின் ஆசிரியர்

(A) வில்லியம் ஃபாக்னர்
(B) ஷேக்ஸ்பியர்
(C) இப்ஸன்
(D) சாமுவேல் பெக்கட்

97. தற்கொலை செய்து கொண்ட பிரபல கவிஞர்

(A) அன்னா அக்மதோவா
(B) ஸில்வியா ப்ளாத்
(C) இஸபெல்லா கார்டனர்
(D) நஸீம் ஹிக்மத்

98. பாப்லோ நெருடாவிற்கு நோபல் பரிசு வழங்கப்பட்ட ஆண்டு

(A) 1968
(B) 1969
(C) 1970
(D) 1971

99. ‘போரும் அமைதியும்’ என்னும் நாவலின் ஆசிரியர்

(A) லியோ டால்ஸ்டாய்
(B) துர்கனேவ்
(C) மக்ஸிம் கார்க்கி
(D) ப்ரான்ஸ் காஃப்கா

100. ‘நூறு பூக்கள் மலரட்டும்’ என்னும் புகழ்பெற்ற வரிகளைச் சொன்னவர்

(A) ஆப்ரகாம் லிங்கன்
(B) மாவோ
(C) மகாத்மா காந்தி
(D) சர்ச்சில்